## விஸ்வதீப்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

## மூன்றாம் வகுப்பு தமிழ் இரண்டாம் பருவம்

## கற்றல் பயிற்சித் தாள்

### பாடம்: 1. எங்கள் சுற்றுலா (பாம்.. பாம்..)

**அ. பொருள் தருக:**

1. வியப்பு - ஆச்சரியம்
2. மகிழ்ச்சி - சந்தோஷம்
3. வழங்குதல் - கொடுத்தல்
4. அருவி - மலையிலிருந்து விழும் நீரோட்டம்
5. பிஞ்சு - காய் முற்றாத நிலை

**ஆ. பிரித்து எழுதுக:**

1. பாட்டுப்பாடி = பாட்டு + பாடி
2. சிரித்திடுவோம் = சிரித்து + இடுவோம்
3. உன்னைப்போல் = உன்னை + போல்
4. ஓசைகேட்டு = ஓசை + கேட்டு

**இ. சேர்த்து எழுதுக:**

1. ஊரை + சுற்றி = ஊரைச்சுற்றி
2. மலை + நிலம் = மலைநிலம்
3. மயில் + போல் = மயில்போல்
4. கொய்யா + பழம் = கொய்யாப்பழம்

**ஈ. எதிர்ச்சொல்:**

1. சிரிப்பு × அழுகை
2. உயர்வு × தாழ்வு
3. இரவு × பகல்
4. மகிழ்ச்சி × வருத்தம்
5. மேல் × கீழ்
6. சூடான × குளிர்ச்சியான

**உ. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. குழந்தைகள் குயிலுடன் சேர்ந்து **பாடுகிறார்கள்**.
2. குழந்தைகள் மலையை பார்த்து **வியக்கிறார்கள்.**
3. குக்கூ வென்று கூவுவது **குயில்.**
4. குடுகுடு வென்று வருவது **முயல்.**

**ஊ. வினாக்களுக்கு விடையளிக்க:**

**1. பேருந்தில் வரும் போது குழந்தைகள் என்ன செய்கிறார்கள்?**
பேருந்தில் வரும் போது குழந்தைகள் பாட்டுப்பாடிச் சிரிக்கிறார்கள்.

**2. குழந்தைகள் எதைச்சுற்றிப் பார்க்கிறார்கள்?**
குழந்தைகள் ஊரைச்சுற்றிப் பார்க்கிறார்கள்.

**3. குழந்தைகள் அணிலுக்கு என்ன தந்தனர்?**
குழந்தைகள் அணிலுக்கு கொய்யாப்பழங்கள் தந்தனர்.

**4. குழந்தைகள் முயலுக்கு என்ன தந்தனர்?**
குழந்தைகள் முயலுக்கு வெள்ளரிப்பிஞ்சு தந்தனர்.

## பாடம்: 2. புதிய விளையாட்டு

**அ. பொருள் தருக:**
1. வேகமாக - விரைவாக
2. உரக்க - சத்தமாக
3. இணைந்து - சேர்ந்து
4. நாளை - அடுத்த நாள்
5. சாப்பிடுவாள் - உண்பாள்

**ஆ. பிரித்து எழுதுக:**
1. புயல்போல = புயல் + போல
2. தொட்டுவிட்டாள் = தொட்டு + விட்டாள்
3. கண்டுபிடித்தேன் = கண்டு + பிடித்தேன்
4. விளையாடும்போது = விளையாடும் + போது

**இ. சேர்த்து எழுதுக:**

1. சில + நாள்களாக = சிலநாள்களாக
2. விளையாடி + முடித்தனர் = விளையாடிமுடித்தனர்
3. பந்து + விளையாட்டு = பந்துவிளையாட்டு
4. ஓடி + பிடித்து = ஓடிப்பிடித்து
5. திரும்பி + நின்று = திரும்பிநின்று
6. புதிய + தோழி = புதியதோழி

**ஈ. எதிர்ச்சொல் எழுதுக:**
1. உள்ளே × வெளியே
2. வலது × இடது
3. தெரியும் × தெரியாது
4. நண்பன் × பகைவன்
5. முன்பு × பின்பு
6. உரக்க × மெதுவாக

**உ. கோடிட்ட இடத்தை நிரப்புக:**
1. அமீர் பள்ளியில் நடந்தவற்றைத் தன் **அம்மாவிடம்** கூறுவான்.
2. அமீர் வியந்து பேசும் புதிய தோழியின் பெயர் **ஓவியா**.
3. ஓவியாவால் **பார்க்க** முடியாது.
4. நண்பர்கள் விளையாடும்போது ஓவியா **ஒலிகளைக்** கேட்டே மகிழ்வாள்.
5. குமார் **புயல்போல** வேகமாக ஓடுகிறான்.

**ஊ. வினாக்களுக்கு விடையளிக்க:**

**1. அமீர் யாரிடம் பள்ளியில் நடந்தவற்றைக் கூறுவான்?**
அமீர் தன் அம்மாவிடம் பள்ளியில் நடந்தவற்றைக் கூறுவான்.

**2. அமீர் யாரைப் பற்றி வியந்து பேசினான்?**
அமீர் தன் புதிய தோழி ஓவியாவைப் பற்றி வியந்து பேசினான்.

**3. ஓவியாவால் ஏன் பார்க்க முடியவில்லை?**
ஓவியாவால் பார்க்க முடியாது. அவளுக்குப் பார்வை இல்லை.

**4. நண்பர்கள் விளையாடும்போது ஓவியா எவ்வாறு மகிழ்வாள்?**
நண்பர்கள் விளையாடும்போது எழும் ஒலிகளைக் கேட்டே ஓவியா மகிழ்வாள்.

**5. ஓவியா விளையாட்டில் எவ்வாறு பங்கேற்றாள்?**
விளையாடும்போது எழும் ஒலிகளைக் கேட்டுக் கொண்டு, அவற்றை உணர்ந்து உரக்கக் கூறி விளையாட்டில் பங்கேற்றாள்.

**6. ஓவியாவின் எந்தச் செயல்கள் அமீரை வியக்க வைத்தன?**
ஓவியா சிந்தாமல் சாப்பிடுவது, இடிக்காமல் நடப்பது, பணத்தைத் தொட்டுப் பார்த்தே சரியாகக் கூறுவது ஆகியவை அமீரை வியக்க வைத்தன.

## பாடம்: 3. கேட்டது என்ன? தந்தது என்ன?

**அ. பொருள் தருக:**

1. விடை - பதில்
2. பழம் - கனி
3. புறப்பட்டன - கிளம்பின
4. அழைத்து - கூப்பிட்டது
5. தருகிறேன் - கொடுக்கிறேன்
6. அனைவரிடமும் - எல்லோரிடமும்

**ஆ. பிரித்து எழுதுக:**

1. கூடுகட்டி = கூடு + கட்டி
2. என்றுதான் = என்று + தான்
3. தாடிவைத்த = தாடி + வைத்த
4. தேன்கூடு = தேன் + கூடு

**இ. சேர்த்து எழுதுக:**

1. ஒரு + காட்டில் = ஒருகாட்டில்
2. மற்ற + விலங்குகள் = மற்றவிலங்குகள்
3. சில + நாள்களாக = சிலநாள்களாக
4. புதிர் + போன்று = புதிர்போன்று
5. அலை + பேசி = அலைபேசி
6. குறிப்பிட்ட + நேரத்தில் = குறிப்பிட்டநேரத்தில்
7. நேரடியாக + பேசுவதில்லை = நேரடியாகப்பேசுவதில்லை

**ஈ. எதிர்ச்சொல் எழுதுக:**

1. நண்பர்கள் × பகைவர்கள்
2. நல்ல × கெட்ட
3. நேரடியாக × மறைமுகமாக
4. உள்ளே × வெளியே
5. வருதல் × செல்லுதல்
6. தொடக்கம் × முடிவு
7. அருகில் × தொலைவில்
8. வாங்குதல் × விற்றல்

**உ. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. முயல், அணில், கரடி மூன்றும் **நண்பர்கள்**.
2. அணிலும் கரடியும் **சந்தைக்குப்** புறப்பட்டன.
3. கரடி **அலைபேசியில்** முயலை அழைத்தது.
4. கடையில் பொருளை வாங்கும்போதும் **புதிராகவே** பேசின.

**ஊ. வினாக்களுக்கு விடையளிக்க:**

**1. காட்டில் நண்பர்களாக இருந்த விலங்குகள் யாவை?**

முயல், அணில், கரடி ஆகிய மூன்றும் நண்பர்களாக இருந்தன.

**2. முயல், அணில், கரடி எவ்வாறு பேசத் தொடங்கின?**

முயல், அணில், கரடி புதிர் போட்டு பேசத் தொடங்கின.

**3. சந்தைக்குப் புறப்பட்ட விலங்குகள் யாவை?**

அணிலும் கரடியும் சந்தைக்குப் புறப்பட்டன.

**4. கரடி முயலை எவ்வாறு அழைத்தது?**

கரடி அலைபேசியில் முயலை அழைத்தது.

## பாடம்: 4. நல்லவை அறிவோம்

### அ. பொருள் தருக:

1. ஓதாமல் - படிக்காமல்
2. பொல்லாங்கு - தீமை, குறை, குற்றம்
3. வருத்தம் - கவலை
4. பொய் - உண்மை அல்லாத
5. ஒருவரையும் - எவரையும்
6. நெஞ்சம் - மனம்

### ஆ. பிரித்து எழுதுக:

1. ஒருநாளும் = ஒரு + நாளும்
2. நான்தான் = நான் + தான்
3. பொய்தன்னை = பொய் + தன்னை
4. உதவிகூட = உதவி + கூட

### இ. சேர்த்து எழுதுக:

1. நாள் + தோறும் = நாள்தோறும்
2. நெஞ்சம் + ஆர = நெஞ்சார
3. பூ + தொட்டி = பூந்தொட்டி
4. அலை + பேசி = அலைபேசி

### ஈ. எதிர்ச்சொல் எழுதுக:

1. நல்ல × கெட்ட
2. உண்மை × பொய்
3. தெரியும் × தெரியாது
4. நன்மை × தீமை

### உ. கோடிட்ட இடத்தை நிரப்புக:

1. **ஓதாமல்** ஒருநாளும் இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் **பொல்லாங்கு** சொல்ல வேண்டாம்.
3. உண்மையை அறியாமல் ஒருவர்மீது **குற்றம்** சுமத்தக்கூடாது.
4. நெஞ்சாரப் **பொய்தன்னை** சொல்ல வேண்டாம்.
5. குழந்தை தவறி **பூந்தொட்டியை** உடைத்துவிட்டது.
6. இனி **பொய்** சொல்லமாட்டேன் என்று குழந்தை கூறியது.
7. **நாள்தோறும்** பிடித்ததைப் படித்தனர்.
8. ஒருவர் தனக்குத் தெரிந்தே **உண்மை** இல்லாதவற்றைப் பேசக்கூடாது

**ஊ. சரியா? தவறா?**

1. உண்மையை அறியாமல் ஒருவர்மீது குற்றம் சுமத்தக்கூடாது. – **சரி**
2. நாம் எப்போதும் பொய் சொல்ல வேண்டும். – **தவறு**
3. நாள்தோறும் படிப்பது நல்ல பழக்கம். – **சரி**

**எ. வினாக்களுக்கு விடையளிக்க:**

**1. ஒருநாளும் எதைச் செய்யாமல் இருக்கக் கூடாது?**
ஒருநாளும் படிக்காமல் இருக்கக் கூடாது.

**2. ஒருவரைப் பற்றி எப்படிப் பேசக்கூடாது?**
ஒருவரைப் பற்றி பொல்லாங்கு **பேசக்கூடாது.**

**3. பாபு எடுத்துக்கொண்டதாகக் கூறியது எது?**
பாபு எடுத்துக்கொண்டதாகக் கூறியது பம்பரம்.

**4. உண்மையை அறியாமல் ஒருவர்மீது குற்றம் சுமத்தலாமா?**
உண்மையை அறியாமல் ஒருவர்மீது குற்றம் சுமத்தக்கூடாது.

**5. அம்மா எதற்காக வருத்தப்பட்டார்?**
பூந்தொட்டி உடைந்ததற்காக அம்மா வருத்தப்பட்டார்.

**6. பூந்தொட்டியை உடைத்தது யார்?**
குழந்தை தவறுதலாகப் பூந்தொட்டியை உடைத்தது.

**7. குழந்தை ஏன் வருத்தப்பட்டது?**
உண்மையைச் சொல்லாமல் இருந்ததற்காகக் குழந்தை வருத்தப்பட்டது.

**8. நாம் உண்மையை அறியாமல் என்ன செய்யக்கூடாது?**
உண்மையை அறியாமல் ஒருவர்மீது குற்றம் சுமத்தக்கூடாது.

**9. ஒருவர் தனக்குத் தெரிந்தே எவற்றைப் பேசக்கூடாது?**
ஒருவர் தனக்குத் தெரிந்தே உண்மை இல்லாதவற்றைப் பேசக்கூடாது.

## இலக்கணம்
## திணை

**1. திணை என்பதற்குப் பொருள் என்ன?**
திணை என்பதற்குப் ஒழுக்கம் என்பது பொருள்.

**2. உயர்திணை என்றால் என்ன?**
உயர்ந்த ஒழுக்கமுடைய மக்கள், தேவர், நரகர் போன்றோர் உயர்திணை ஆவர்.
எ.கா: முகிலன், மீனா, முருகன்

**3. அஃறிணை என்றால் என்ன?**
அல் + திணை = அஃறிணை. உயர்ந்த ஒழுக்கம் அல்லாத திணை அஃறிணை எனப்படும். உயர்ந்த ஒழுக்கம் அல்லாத உயிர் உள்ளனவும், உயிர் அற்றனவும் அஃறிணை எனப்படும்.
எ.கா: பசு,மீன், கடல், மரம்.

## பால் வகை

பால் என்பது பகுப்பு: உயர்திணை, அஃறிணைப் பொருள்களைப் பகுத்துக் கூறுவது பால் எனப்படும். பால் ஐந்து வகைப்படும் அவை.

1. **ஆண்பால்**
2. **பெண்பால்**
3. **பலர்பால்**
4. **ஒன்றன்பால்**
5. **பலவின்பால் என்பன.**

**உயர்திணைக்குரிய பால்கள் மூன்று :**

1. **ஆண்பால்:** உயர்திணையில் ஆணைக் குறிப்பது ஆண்பால்.
   எ. கா: முருகன், இனியன்

2. **பெண்பால்**: உயர்திணையில் பெண்ணைக் குறிப்பது பெண்பால்.
   எ. கா: அபிராமி, செல்வராணி, சாந்தி

3. **பலர்பால்:** உயர்திணையில் பலரைக் குறிப்பது பலர்பால்.
   எ. கா: மாணவர், தொழிலாளர், மகளிர்

**அஃறிணைக்குரிய பால்கள் இரண்டு:**

1. **ஒன்றன்பால்:** அஃறிணையில் ஒன்றை மட்டும் குறிப்பது ஒன்றன்பால்.
   எ. கா: வீடு, பறவை, பசு

2. **பலவின்பால்:** அஃறிணையில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால்.
   எ. கா: வீடுகள், பறவைகள், பசுக்கள்

# நால்வகைச் சொற்கள்

தமிழில் சில எழுத்துக்கள் தனித்தோ அல்லது தொடர்ந்து நின்று பொருள் தருமாயின் அது சொல் எனப்படும்.

எ.கா : ஈ, பூ, மை, கல், கடல், தங்கம்.

இலக்கண அடிப்படையில் சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல் இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

1. **பெயர்ச்சொல்:**

ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

**எ.கா:** பாரதி, பள்ளி, காலை, கண், நன்மை, ஓடுதல்.

2. **வினைச்சொல்:**

வினை என்னும் சொல்லுக்கு செயல் என்பது பொருள். செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

எ.கா: வா, போ, எழுது, விளையாடு.

3. **இடைச்சொல்:**

பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வரும் சொல் இடைச்சொல் ஆகும். இது தனித்து இயங்காது.

**எ.கா:** உம்- தந்தையும் தாயும்
ஐ - திருக்குறளை

4. **உரிச்சொல்:**

பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் தன்மையை மிகுதிப்படுத்த வருவது உரிச்சொல் ஆகும்.

**எ.கா:** மா - மாநகரம், சால - சாலச் சிறந்தது

## அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி

**1.அடுக்குத்தொடர் என்றால் என்ன?**

ஒரே சொல் மீண்டும் மீண்டும் அடுக்கி வரும், பிரித்தால் பொருள் தரும். **எ.கா: பாடிப்பாடி, சொல்லிச்சொல்லி, வருக வருக.**

**2.இரட்டைக்கிளவி என்றால் என்ன?**

ஒரே சொல் மீண்டும் மீண்டும் அடுக்கி வரும், பிரித்தால் பொருள் தராது. **எ. கா: சலசல, குளுகுளு, கடகட, மடமட.**